அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 05/2018

எனது இல. PSC/APP/03/27/03/2018

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,

இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி,

பத்தரமுல்லை.

2018 செப்டம்பர் மாதம் .... ஆம் திகதி

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்.

நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தரொருவர் அரசாங்க சேவையில் பிறிதொரு நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்படும் போது தகுதிகூர் நிலைக் காலத்தை தீர்மானித்தல்

நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தரொருவர் அரசாங்க சேவையில் பிறிதொரு நிரந்தரப் பதவிக்கு நியமிக்கப்படும் போது ஓராண்டுக் காலப் பதில் கடமை காலப் பகுதிக்கு உட்படுத்தப்படல் வேண்டும். ஆயினும், அவரது முன்னைய சேவைகள் மற்றும் அனுபவங்கள் புதிய பதவிக்கான தகைமையொன்றாக அமையமாட்டாதென நியமன அதிகாரி தீர்மானிக்குமிடத்து, அந்த உத்தியோகத்தர் புதிய பதவியில் மூன்று ஆண்டுகளைக் கொண்ட தகுதிகூர் நிலைக் காலப்பகுதிக்கு உட்படுதல் வேண்டும்.

02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பிரிவு 97 இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

சி.பி.டபிள்யு. குணதிலக
செயலாளர், (பதில் கடமை)
அரசாங்க சேவை ஆணைக்குழு.

මෙහි සිංහල පිටපත අනුව මෙම පරිවර්තනය නිවැරදි බව සහතික කරමි.

2018/09/18
දිනය

අත්සන